செ.வெ.எண்: 28 நாள்: 12.01.2026

# புதுக்கோட்டை மாவட்டம்
# பத்திரிக்கை செய்தி

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.12.2024ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய வெள்ளிவிழா நிகழ்ச்சியில் ஒவ்வோராண்டும் குறள்வாரம் கொண்டாடப்பெறும் என அறிவிக்கப்பெற்றது. புதுக்கோட்டை மாவட்டத்தில் குறள் வார விழாவின் ஒரு நிகழ்வாக பொதுமக்கள் மட்டும் கலந்துகொள்ளும் (பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள்/ஆசிரியர்கள் நீங்கலாக) குறள் சார்ந்த ஓவியப்போட்டி மற்றும் குறள் ஒப்பித்தல் போட்டி புதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் 19.01.2026 (திங்கட்கிழமை) அன்று நடத்தப்பெறவுள்ளன. போட்டிகளில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் (ஆதார் அட்டை அல்லது குடும்ப அட்டை நகல் அளிக்க வேண்டும்).

முற்பகல் 10.00 மணிக்கு குறள் ஒப்பித்தல் போட்டி நடைபெறும். அதிக எண்ணிக்கையிலான குறளை ஒப்பித்தோர் தரவரிசை அடிப்படையில் முதல் 5பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5000/-வீதமும், அடுத்த 5 பேர் ஒவ்வொருவருக்கும் ரூ.3,000/-வீதமும், அடுத்த 5பேர் ஒவ்வொருவருக்கும் ரூ.2,000/- வீதமும் என மொத்தம் 15 பேருக்கு ரூ.50,000/- பரிசுத்தொகையாக வழங்கப்பெறும். ஒரே தரவரிசையில் 5க்கும் மேற்பட்டோர் இடம்பெறும் நேர்வில் திருக்குறள் சார்ந்த வினாக்கள் கேட்டு பதிலளிக்கும் நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்.

பிற்பகல் 2.00 மணிக்கு குறள் சார்ந்த ஓவியப்போட்டி நடைபெறும். குறள் சார்ந்த ஓவியப்போட்டிக்கான தலைப்பு ஏதேனும் ஓர் அதிகாரம் அல்லது ஏதேனும் ஒரு திருக்குறளை மையப்படுத்தி ஓவியம் வரைதல் வேண்டும். ஓவியம் வரைவதற்கு தேவையான எழுதுபொருட்களை போட்டியாளர்களே கொண்டுவர

வேண்டும். ஓவியம் வரைவதற்கு கால அவகாசம் 1 மணிநேரம் வழங்கப்பெறும். ஓவியப்போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/-மும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/-மும் வழங்கப்பெறும். பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் மாவட்ட ஆட்சியரின் திருக்கரங்களால் பிறிதொரு நாளில் வழங்கப்பெறும்.

கூடுதல் விவரங்களை அறிந்துகொள்வதற்கு உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை என்ற முகவரியிலும் 04322-228840 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்புகொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறள் வார விழாவினை முன்னிட்டு நடத்தப்பெறும் குறள் சார்ந்த ஓவியப்போட்டி, குறள் ஒப்பித்தல் போட்டிகளில் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai    PRO PDKT    @PRO_Pudukkottai    Pro.Pudukkottai